45 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே"


வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

Acc-No-10813

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 13-5-33

கோழி தலை தூக்காதாம்!



குப்பையில் தலையை நுழைத்துக் கொண்டு இந்திய சர்க்கார் என்ற நெருப்புக் கோழி தவித்துக் கொண்டிருக்கிறது. காந்தி மகான் :—"அப்பா நான் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைக்கிறேன். இந்தக் குப்பையிலிருந்து கோழி தலையைத் தூக்குமாறு செய்ய மாட்டாயா?" என்று கேட்கின்றார். வில்லிங்டன் :—"முடியாது" என்கின்றான்.

மிடுக்கான பதில்

"முடியாது" என்று வில்லிங்டன் அரசு, காந்திஜீயின் தன்மையான கடிதத்துக்கு இறுமாப்பாக மறுநாளே பதில் தந்து விட்டது. ஐயனின் கடிதத்தில் பெருந் தன்மையும் பணிவும் பொலிகின்றன. சர்க்கார் பதிலில் குறுகிய திருஷ்டியும், கர்வமும் தாண்டவ மாடுகின்றன. ராஜ தந்திரிகளுக்கு வேண்டிய 'முன் யோசனை' என்பது அதில் ஒரு துளியும் காணப்படவில்லை.

காந்திஜியின் உபவாசம் சிறிதும் அரசியல் சம்பந்த மற்றதெனத் தெரிவித்ததனால்தான் அவர் விடுதலை செய்யப்பட்டாராம், பதினாறு மாதங்களாகியும் அரசாங்க மனோ பாவத்தில் மாறுதல் இல்லை யென்பது இதனின்று தொனிக்கிறதன்றோ! ஐயன் விடுதலைக்குப் பின், அவர் வெளியிட்ட அறிக்கை, அரசியல் நிலைமையில் ஒருபெரும்மாறுதலை ஏற்படுத்தி விட்டதென்பதை அரசாங்கம் ஏனோ உணரவில்லை?

ஹாரி ஹெயிக் என்ற அதிகாரி எப்போதோ ஏதோ சொன்னாராம். சர்க்காருக்கு அதுவே வேத வாக்காகி விட்டது. "மீண்டும் சட்ட மறுப்புத் தொடங்கப்பட மாட்டாதென்று நம் பத்தகுந்த ஆதாரங்கள் வேண்டும். தேவையான போது சட்ட மறுப்புச் செய்வோமெனப் பூச்சாண்டி காட்டுவோருடன் சர்க்கார் ஒத்துழைப்பது சாத்தியமே யல்ல" என்று ஹெயிக் கூறினாராம். இதன் பொருளென்ன? சட்ட மறுப்பை இனித் தொடங்குவதே யில்லையென்று காங்கிரஸ் கையடித்துத் தரவேண்டு மென்பதா? அது நடக்கக்கூடிய காரியமா? சட்ட மறுப்பைக் கண்டு இவ்வளவு பதறிப் பயப்படும் அரசாங்கம், அதனைத் தேவையற்றதாக்கும் நிரந்தர சமாதானத்திற்கு வழிகோலுவதன்றோ அறிவுடைமை யாகும்!

"தற்காலிகமாகச் சட்ட மறுப்பை நிறுத்திபோம் பேச வருவது சர்க்கார் நிபந்தனையைப் பூர்த்தி செய்யவில்லை. சட்ட விரோதமான காரியங்கள் சம்பந்தமாக அவர்களுடன் ராஜி பேச உத்தேச மில்லை" என்று சர்க்கார் சொல்லுகிறது. ராஜி பேசுவதாயின், மூலப் பிரச்சினையான அரசியலைப் பற்றித்தான் பேசப்படும். அது தீர்ந்து விடுமாயின், சட்ட மறுப்புத் தானாகவே நிறுத்தப்பட்டு விடும். இந்த எளிய உண்மையை அரசாங்கம் உணரவில்லையா, அல்லது திரித்துக் கூறுகிறதா?

இரண்டில் எதுவாயினும் அது முற்றிலும் வெறுக்கத் தக்கதே யாகும். ஆனால், இந்தப் பதிலைக் கண்டு, காங்கிரஸ்காரர் சிறிதும் பரபரப்போ, ஏமாற்றமோ அடையப் போவதில்லை. காந்தி யடிகளும் இத்தகைய பதில் கிடைக்குமென்று ஊகித்துத்தான், "மீண்டும் எரவாடாவுக்கு வந்து என்னை அர்ப்பணம் செய்து கொள்ள நான் தயார்" என்று தமது கடிதத்தில் எழுதினாரோ என்னவோ?

ஒரு ஹார்ரி ஹெயிக், ஒரு ஹெயிலி இப்பேர்ப்பட்ட ஏகாதிபத்தியக் கிறுக்கர்களின் பெயர்கள் அவர்கள் உத்தியோக மிழந்த மறுநாளே மறந்து போய்விடும். ஆனால் காந்தியடிகளின் பெயரோ சந்திர சூரியருள்ளவரை இவ்வுலகில் நிலவும். அப்பேர்ப்பட்ட ஒரு மகா புருஷனின் கடிதத்துக்கு இப்பேர்ப்பட்ட மிடுக்கான பதிலை வரைந்த அதிகார வர்க்கத்தை என்னென்பது!

ஆறின கஞ்சி பழங் கஞ்சி

சைகோனிலிருந்து இரண்டு செட்டிமார்களை பிரஞ்சு அரசாங்கம் நாடு கடத்தி விட்டதல்லவா? அந்த விஷயமாக ஸர் ஜான் சைமன் பிரஞ்சு துரைத்தனத்தோடு ஏதோ பேசிப் பார்த்தாராம். இதுவரையில் தமது பேச்சினால் ஏதும் பலன் ஏற்படவில்லை யென்றும், ஆயினும் தொடர்ந்து இது விஷயமாக இன்னும் பேசப் போவதாகவும் சைமன் பார்லிமெண்டில் கூறியிருக்கிறார். இப்படியே பேசிக் கொண்டிருந்தால் ஆறிய கஞ்சி பழங் கஞ்சியாகிவிடு மென்பது சைமனுக்குத் தெரியும். ருஷியாவில் நாடு கடத்தப்பட்ட பிரிட்டிஷாருக்குக்காகக் காட்டிய அவ்வளவு அக்கரையோடு சைமன் துரை நாடு கடத்தப்பட்ட சைகோன் செட்டியார் விஷயத்தையும் கவனிக்கின்றாரா என்று ஒரு சந்தேகம் ஏற்படுகிறது.

கீதா போதனை

எரவாடா சிறையிலிருந்து மகாத்மாஜி எழுதியது

உபவாஸ ஞாபகப் பதிப்பு விலை அணா 2.

தபால் செலவு உள்பட 3அணா ஸ்டாம்பு அனுப்பவும்

ஏஜெண்டுகள் உடனே தேவையான பிரதிகளுக்கு முன் பணத்துடன் எழுதவாராக

சுதந்திரச் சங்கு காரியாலயம்

வலது கையும் இடது கையும்

"ஆடு நனைகிறதென்று ஓநாய் குந்தி யழுததாம்" என்று சொல்லுவார்கள். அந்த மாதிரி சென்னை சர்க்கார் இப்பொழுது ஒரு அறிக்கை போட்டிருக்கிறது. வகுப்பு வாதத்தால் மாகாணத்துக்கு ஏற்படக்கூடிய ஆபத்தைக் குறித்து அது நீலிக் கண்ணீர் விடுகிறது. இந்தியருக்குச் சுயராஜ்யம் வேகமாக ஓடிவந்து கொண்டிருக்கிறதாம். அது வந்து கரை சேர்வதற்குள், ஜாதிப் பித்தமும் ஜாதிச் சண்டைகளும் தொலையா விட்டால், வகுப்புக்கள் பலவும் ஒற்றுமைப் படாவிட்டால், கவர்னர் தமது விசேஷ அதிகாரத்தை உபயோகித்துக் கொண்டேயிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுமாம்; சுயராஜ்யம் நடக்காது போய் விடுமாம்.

16 மாத காலத்திற்குள் நமது மாகாணத்தில், 12 வகுப்புக் கலவரங்கள் நிகழ்ந்திருக்கின்றனவாம். அவற்றில் உயிரும் பொருளும் சேதமாயிருக்கின்றனவாம். வேறு பல சில்லறைக் கலவரங்களும் நேரிட்டுளவாம். பல நூற்றாண்டுகளாக பல வகுப்புக்களும் ஒற்றுமையோடு அமைதியாய் வாழ்ந்திருக்கும் இடங்களில் விஷமிகள் கலவரத்தைத் தூண்டி வருகின்றார்களாம்.

இந்த வகுப்புக் கலவரங்களுக் கெல்லாம் மூல காரணமான வகுப்பு வாதத்துக்கு ஆக்கங் கொடுத்தது யார்? அன்று முதல் இன்று வரையில் "வகுப்பு வாதம் கூடாது, கூடாது" என்று காங்கிரஸ் தொண்டை வறளக் கத்திக் கொண்டு வருகிறதே! அதை அரசாங்கம் இலட்சியம் செய்ததோ, இன்றுதான் செய்கிறதோ? சட்ட சபையில் வகுப்பு வாதம், சர்க்கார் உத்தியோகத்தில் வகுப்பு வாதம், ஸ்தல ஸ்தாபனங்களில் வகுப்பு வாதம், கார்ப்பொரேஷனில் வகுப்பு வாதம்—இப்படி எல்லா ஸ்தாபனங்களிலும் வகுப்பு வாதத்தை நேர் முகமாகவோ, மறை முகமாகவோ புகுத்துவதற்கு சர்க்கார் இதுவரை உடந்தையா யிருக்கவில்லையா?

வலது கையால், வகுப்பு வாத அனலை விசிறிக் கொண்டே, இடது கையால் வகுப்பு வாதம் வேண்டாமென்று ஜாடை காட்டுவதற்கு ஏதாவது அர்த்தமுண்டா? கவர்னரின் விசேஷ அதிகாரத்தைப் பற்றி தேசத்துக்கு நினைப்பூட்டுவதற்காகவே இவ்வறிக்கை என்று தோன்றுகிறதே யொழிய, வேறு விதமாக நினைக்க நமக்கு எப்படி மனம் இடந் தரும்?

கிலி போச்சோ?

உதக மண்டலத்தில் கதர்ப் பொருட் காட்சியொன்று திறந்து வைக்கப்பட்டது. காட்சியைத் திறந்து வைத்தவர் சென்னை மாகாணத் தொழிலபிவிருத்தி மந்திரி திரு. குமாரசாமி ரெட்டியார். இது ஒரு ஆச்சரியமல்லவா? காட்சியைத் திறந்தபோது, "குடிசைத் தொழில்களை வளர்ப்பதில் சர்க்காருக்கு மிகக் கவலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு ஏற்றது கதர்த் தொழில் தான். இது அவர்களுக்குப் புதிதல்ல. போதிய ஆதரவு கொடுத்தால், அவர்கள் இதை சுலபமாகக் கைக் கொள்ளுவார்கள்" என்று அவர் கூறினார்.

ஆயின், இத்தனை நாளாக ஏன் சர்க்கார் கதரை ஆதரிக்கவில்லை? கதர் இயக்கத்தைக் காங்கிரஸ்காரர்கள் தங்கள் கட்சித் திட்டமாக வைத்துக் கொண்டிருந்தார்களாம். அதனால் தான், அரசாங்கமும், அக்கட்சியைச் சேராத தம்மைப் போன்றோரும் அதை ஆதரிக்க முடியவில்லையாம். இப்பொழுது கதர் எல்லாருக்கும் பொதுவாய்ப் போய்விட்டதால், சர்க்கார் அதனிடம் அனுதாபம் காட்டத் தீர்மானித்து விட்டார்களாம். இவ்வாறு கூறுகிறார் இப்போது இந்த மந்திரியார்.

நல்ல காரியத்தை யார் சொன்னா லென்ன? 'குடியை விடு' என்று காங்கிரஸ் பிரசாரம் செய்தால் அதில் பயம்; 'கதர் உடுத்து' எனில் அதிலும் பயம்; 'ஏழைக் குடியானவனுக்கு இரங்கு' எனில், அதிலும் அச்சம். இந்த மாதிரி எதற்கும் பயப்பட்டுக் கொண்டிருப்பவர்களை என்னென்பது?

"நான் சட்ட சபையிலேயே கதரை ஆதரிப்பதாக, மிகத் தைரியமாகக் கூறி விட்டேன்" என்று மந்திரியார் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறார். அடடா! ரெட்டியாரின் தைரியமே தைரியம். கிடக்கட்டும். கிலிதான் போச்சே, இனியாவது மந்திரியார் கதருக்கு என்ன உதவி செய்கிறார் பார்க்கலாம். சும்மா உல்லாசப் பிரயாணங்கள் செய்து, கண் காட்சிகளைத் திறந்து வைத்து விடுவதால் மட்டும் கதருக்குப் பெரிய உபகாரம் ஏற்பட்டு விடுமா? போலிக் கதர் விற்பனையை அரசாங்கம் கட்டுப்படுத்தலாம். கதர் மூட்டைகளுக்கு ரயில் கட்டணங்களைக் குறைக்க ஏற்பாடு செய்யலாம். அரசாங்க இலாகா சேவகர்கள் கதரே யணிய வேண்டுமென வற்புறுத்தலாம். இதை யெல்லாம் குமாரசாமியார் செய்வாரா?

பட்டினி புராணம்

21 நாட்களாவது? இதென்ன கணக்கு? மகாத்மா தமது உபவாஸத்தை மூன்றுவார காலமென்று ஏன் குறிப்பிட வேண்டுமென்று கேட்கலாம். உலக சரித்திரத்தில் 21 நாள் உபவாஸக் கதையொன்று பிரஸித்தி பெற்றுளது. பாபிலோனியாவில் இஸ்ரேலின் மக்கள் அடக்குமுறையின் கீழ் அவதிப்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்களை மீட்க முயன்ற தானியேல் என்ற மகான் 21 நாள் உண்ணுத் தவம் கிடந்து வழி கண்டு பிடித்தாராம். உபவாஸத்திற்குப் பின்பு அவர் சொன்னர். "என்னேடிருந்த அத்தனை பேருக்கும் ஆண்டவன் தோற்றம் விளங்கவில்லை. 21 நாள் உண்ணுத் தவம் கிடந்த எனக்கு மட்டும் அத்தோற்றம் தெரிந்தது" என்று கூறினர். அன்று தானியேல் இஸ்ரேல் மக்களை மீட்டது போல இன்று காந்தி மகான் ஹரிஜனங்களை மீட்கப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிருர். ஆகவே தான் 21 நாள் கணக்கு!

பகவான் கிறிஸ்துவினல் தொடங்கப்பட்ட உபவாச விரதம் அவரது மதத்திலேயே தோய்ந்துவிட்டது. கிறிஸ்துவ சமயத்தில் உபவாசக் கதைகள் அநேகம் உண்டு. எஸ்தர் என்ற ராணி தமது யூத பிரஜைகளோடு மூன்று நாள் உபவாச மிருந்தாளாம். பிற்காலத்தில் 'சீஸர்' என்ற வேந்தன் 'ஸெயிண்ட் பால்' என்ற ஞானியைச் சிறையிலிட்டான். அரசனை நேரில் காண்பதற்குமுன் அந்த ஞானி 13 நாள் உண்ணு விரதமிருந்து ஆண்டவன் அருள் பெற்றுர். மார்ட்டின் லூதர் என்ற சீர்திருத்தக்காரர் தாம் விவிலிய நூலை மொழி பெயர்த்த போது பல தினங்கள் ஆகாரமின்றி உட்கார்ந்து எழுதினராம். பட்டினியின் பயனுகவே அவரால் புதுக் கிளர்ச்சி தோன்றிற்றும். சமீப காலத்தில் கர்த்தன் பாதங்களை யடைந்த இந்திய கிறிஸ்துவான ஸாது சுந்தர்சிங் 40 நாள் பட்டினி கிடந்து ஆண்டவனைத் துதித்த கதையையும் நாம் மறப்பதற்கில்லை.

கிறிஸ்து சமயம் மட்டுமல்ல! மகமத் நபிநாயகம்—(ஸல்) அவர்களின் சரிதையைக் கவனித்தாலும் எவ்வளவு தடவை அந்த அண்ணல் உபவாஸமிருந்து சிந்தனை செய்தனர்! மூசே என்ற ஞானி, ஒளி பெற்றதற்கும் நீண்டகால உபவாஸமே காரணமாயிற்று. கௌதம புத்தர் 47 நாள் உபவாஸமிருந்து போதி மரத்தடியில் ஞானேதயம் பெற்றுரென புத்த சரித்திரம் சொல்கின்றது. ஆகவே புதிய விஷயங்களை உலகுக்குப் புகட்ட வந்த பெரியார் எல்லாரும் நீண்டகால உபவாஸ மிருந்தே சாதித்தனரென்பது நிச்சயமாகின்றது.

சித்த சுத்தத்திற்கு உபவாஸ விரதம் ஒரு நல்ல வழியாகும். ஜர்மனியில் ஸ்வீடன்பர்க் என்ற அறிஞர் உண்ணு விரத மிருந்ததன் பயனுக வருங்கால நிகழ்ச்சிகளை யெல்லாம் கண்டறியும் ஆற்றல் பெற்றுராம். 'ஸ்டாக்ஹோம்' என்ற நகரம் தீப்பட்டு எரியப் போவதென்பதை பல நாட்களுக்கு முன்னே, பல மைல் தூரத்திலிருந்தே அவர் கண்டறிந்து கூறி விட்டார். டாக்டர் டான்னர் என்ற அமெரிக்கர் தாம் நீண்ட வயது வாழ்ந்திருந்ததற்கு தமது உபவாச சக்தியே காரணம் என்று எழுதிச் சென்றுர். அவர் 40 நாள் உபவாஸமிருந்த சக்திவானுவார்.

'உபவாஸம்' என்பது ஒரு ரகஸ்ய சாத்திரமா யிருக்கிறது. அதனல் மனித ஜாதிக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் பல இருக்கக்கூடுமென்று ஊகிக்க வேண்டி யிருக்கிறது. 'வாய் மூடாப் பட்டினி'யாக இருப்பதால்தான் உலகில் பெரும்பாலோர் மக்குகளாக இருந்துவருகிறேம். ஆனல் அவ்வப்போது உபவாஸ விரதத்தை ஏற்றுக்கொள்வதால்தான் மகாத்மா காந்தி போன்றேர் மகான்களா யிருக்கின்றனர்.

டெலிபோன் தொந்தரவு

பூனுவில் தாகர்ஸே பங்களாவில், உண்ணுத் தவமிருக்கும் காந்தி யடிகள், இப்போது இருந்து வருகிறர். அந்த வீட்டின் மெத்தையின் மேல் டெலிபோனிருக்கிறது. ஒரு நாள் லண்டனிலிருந்து 'டெயிலி எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்காரர் கூப்பிட்டார். "ஹலோ காந்தியைக் கொஞ்சம் பேசச் சொல்லுங்களேன்" என்று கேட்டாராம். "அவரால் வர முடியாது. பேசவும் முடியாது" என்று தேவதாஸ் மறுத்து விட்டாராம். இங்கிலாந்துக்கும், இந்தியாவுக்கும் டெலிபோன் வைத்திருப்பது காந்திஜியின் அமைதிக்கு ஆபத்து எற்படுத்தும் போலிருக்கிறதே! ஆகவே ராஜகோபாலாச்சாரியார் பூனுவுக்கு ஒரு தந்தி அடித்திருக்கிறர். "தயவு செய்து அந்த வீட்டிலிருந்து டெலிபோனை அப்புறப் படுத்தி விடுங்கள்" என்பது ராஜாஜி யோசனை.

உண்ணுத் தவம்

மகாத்மா காந்தியின் தேக நிலை பற்றி அவ்வப்போது பிரசுரங்கள் போடுவதென்று பூனுவிலுள்ள டாக்டர்கள் முடிவு செய்திருக்கின்றனர். ஒருவாரம் வரைதான் காந்திஜி கடிதம் எழுதுவது போன்ற அலுவல்களைக் கொஞ்சம் கொஞ்சம் கவனிப்பார். பிறகு சுத்தமாக ஓய்வு எடுத்துக் கொள்வார். விரதத்தின் மூன்ருவது நாளன்று மாலையில் மகாத்மாஜி பதினைந்து நிமிஷம் நூல் நூற்றதன் பயனுக வயிற்றுக் குமட்டல் ஏற்பட்டதாம். அதற்குப் பின்பு அத்தகைய குமட்டல்கள் அடிக்கடி வந்து கொண்டே யிருந்தது. சோடா உப்புக் கலந்த தண்ணீரை அய்யன் அவ்வப்போது அருந்தி வருகிறுர்.

அவருக்கு காமாலை யென்று தந்தி கொடுத்ததின் பேரில் டாக்டர் அன்சாரியும் வருவதாக இருக்கிறுர். கஸ்தூரிபாயும் விடுதலை யடைந்து விட்டாளாம். சரோஜனி தேவியின் பார்வையில் தேவதாஸ், மதுரதாஸ் த்ரிகம்ஜி, பிரிஜ்கிருஷ்ணு மூவரும் சிச்ருஷை செய்து வருகிறுர்கள். டாக்டர் பாட்டக், டாக்டர் கார்புரே இருவரும் நான்கு மணிக்கு ஒருவர் வீதம் பாபுஜீயை கவனித்து வருகின்றனர். பலஹீனத்தின் காரணமாக காந்திஜி நூல் நூற்பதை நிறுத்தி யிருக்கிறுர். பேட்டி காணுவதையும், தபால்களுக்குப் பதில் எழுதுவதையும் நிறுத்திவிட வேண்டுமென்று டாக்டர்கள் கூறுகின்றனர். காந்திஜியை வாஸுதேவ மனனம் செய்வதுடன், துவாதசாக்ஷர மந்திரத்தை ஜபிக்கும்படியும், ஒவ்வொரு தடவை சுவாஸம் விடும்போது "ஸோஹம்" என்று நிசமுச் செய்யும்படியும், பகவானிடத்திலேயே மனத்தைச் செலுத்தும்படியும் மாளவியா தந்தி கொடுத்திருக்கிறுர்.

ராஜஸ்தான சேவா சங்கத்தின் தலைவரான ஸாது ஸத்யப் பிரகாச பாரதி என்பார் மகாத்மாவோடு தாமும் 21 நாள் உண்ணுவிரதமிருப்பதென முடிவு செய்து, இருந்து வருகிறுர். சீக்கிரத்தில் பூனுவிலிருந்து உபவாசத்தை நிறுத்த உத்தரவு வரலாம்.

பூனு ஒப்பந்தத்தில் ஏதாவது மாறுதல் செய்ய வேண்டாமா என்பதை நிர்ணயிக்க ஹரிஜனத் தலைவர்கள் ஒரு மகா நாடு கூட வேண்டுமென காந்தியடிகள் தலைவர் ராஜபோஜருக்கு ஒரு கடிதம் எழுதி யிருக்கிறுர்.

குழந்தையின் காந்தி பக்தி

கண்களில் ஜலம் ததும்பிக் கொண்டிருந்தது; சின்ன ஹிருதயம் படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது; எனது ஏழு வயதுக் குழந்தைக்கு என்ன நேரிட்டு விட்டது? உடம்பில் ஏதும் காயம் படவில்லையே! ஏன் இப்படி விசித்து விசித்து அழுகிறுள்? "ஏன் அம்மா இப்படி அழுகிறே!" என்று கேட்டேன்.

"அப்பா! காந்தி செத்துப் போய் விடுவாரோ?" என்று கேட்டுக் கொண்டே விம்மி விம்மி குழந்தை மறுபடி அழ ஆரம்பித்தாள். இந்தப் பரம துக்கத்தில் தந்தையைத் தவிர வேறு யாரால் தேறுதல் சொல்ல முடியும்?

அவளைக் கையில் தூக்கிக் கொண்டேன். கண்களைத் துடைத்தேன். "அம்மா, காந்தி ஒரு போதும் சாக மாட்டாரம்மா! ஒரு போதும் மாட்டார்" என்று ஆறுதல் கூறிய பின்புதான் அவளது படபடப்பு அடங்கிற்று. இந்த தேசத்தில் எவ்வளவு பேருடைய ஹிருதயத்தை காந்தி அபகரித்து விட்டாரென்பதை இந்த சம்பவம் காட்டுகின்றதல்லவா? எனக்கு என்ன மனதில் தோன்றிற்ருே அதையே தான் குழந்தைக்கும் நான் கூறினேன். "காந்திஜி நம்மை விட்டுப் பிரிய மாட்டார்" என்பதுதான் எனது எண்ணமும் நம்பிக்கையு மாகும். அந்த மகானின் உடல் பெரு மூச்செறிந்து கொண்டு, வதங்கிக் கொண்டிருக்கும் போது, அவரது பெயரால் ஊழியம் செய்துவரும் அன்பர்கள் தங்கள் அசுத்தங்களை யெல்லாம் போக்கிக் கொண்டு சுத்த ஆத்மாக்களாக வேலை செய்வார்களாக! குருநாதனைத் தொடர்வதற்கு அப்போதுதான் நமக்கு யோக்கியதை உண்டு.

* * * *

காந்தியடிகளின் உபவாஸத்தைப் பற்றி அவனவன் தனது கருத்துக் கிணங்கவே ஆலோசித்துக் கொண்டிருக்கிறுன். தேசத்துக்குப் புத்துயிர் தரத்தக்க நலவனைப் பற்றியே காங்கிரஸ்காரன் கவலைப்படுகிறுன். "காந்தி பெயரைச் சுட்டிக் காட்டிப் புதிய அரசியலில் ஏதாவது சில நன்மைகளைப் பறிக்கலாமென்றிருந்தோமே! காந்தியடிகள் என்ன ஆவாரோ?" என்று மிதவாதிகள் கலங்குகின்றனர். உத்தியோகஸ்தர்களிலும் சிலருக்கு யோசனைதான். ஏனெனில் தேசத்தில் சர்க்காருக்கும், புரட்சிக்காரருக்கு மிடையே நிற்கும் பெரியார் காந்தியடிகள் தானன்ருே!

—ராய்ஸ் விக்லி, டெல்லி,

விரோதிகளின் வீச்சு

வெள்ளைக் கடுதாசித் திட்டத்தில் எந்த மாறுதலும் செய்யக்கூடா தென்று சீமையிலுள்ள இந்திய விரோதிகள் முயன்று வருகின்றனர். பார்லிமெண்டில் இந்திய மசோதா வருவதற்கு முன், பிரிட்டிஷ் ஜனங்களின் பொதுஜன அபிப்பிராயத்தை தம் கக்ஷிக்கு இழுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தக் கூட்டம் வேலை செய்து வருகிறது. சாதாரணமாக பிரிட்டனில் உள்ளவனுக்கு என்ன எண்ணமென்றால், "இந்தியா நம்முடைய சொத்து. நமது மூதாதையர் பிதுரார்ஜிதமாக நமக்கு விட்டு விட்டுப் போயிருக்கின்றனர். ஆகவே எப்போதும் அது நம்முடையதாகவே யிருக்க வேண்டும்" என்பதே.

'ஏதோ இந்திய மக்களுக்கு அரசியலில் சில வாக்குறுதிகள் தந்திருக்கிறோமே' என்று பிரிட்டனிலுள்ளவன் சிந்திப்பதே யில்லை. மேலும் அவன் எண்ணுவதாவது: "இந்தியர்களுக்கு அரசியலில் அதிகாரம் தருவானேன்? அங்கே போய் ஆங்கிலச் சிறுவர்கள் உத்தியோகம் பார்க்க வேண்டுமே; அங்கு ஆங்கிலச் சாமான்கள் விற்கப்பட வேண்டுமே" என்றுதான் அவனது எண்ண மிருக்கிறது. இந்த எண்ணங்களைத் தங்களுக்குச் சாதகமாக இந்திய விரோதிகள் ஆக்கிக் கொள்கின்றனர். உதாரணத்திற்கு அயர்லாந்தைக் குறிப்பிட்டுப் பேசுகின்றனர். "நமது விட்டு வாசலிலேயே உள்ள அயர்லாந்தைப் பாருங்கள். நாம் தயையோடு நடந்து கொண்டதின் பலனைக் காணுங்கள். நாம் அவர்களுக்கு 'சுய ஆட்சி' கொடுத்தோம்; சுதந்திர நாடாக ஆக்கினோம்; அந்த சுயேச்சையை எப்படித் திரித்து விட்டார்கள் பாருங்கள். ஆங்கில நாட்டின்மீது கடுமையான வெறுப்பு காட்டுகின்றனர். ராஜ விசுவாசப் பிரமாணத்தைக்கூட உதறி யெறிந்துவிட்டனர். இனி இந்தியாவுக்குச் சுய ஆட்சி தந்தால் 100 அயர்லாந்தைப்போல அது நடந்துகொள்ளும். இந்தப் 'பாதுகாப்பு'களுக்கெல்லாம் பலனில்லாமற் போகும்."

இந்தப் பேச்சு பிரிட்டிஷ் பிரஜைகளுக்குப் பெரிதும் பிடிக்கின்றது. ஆனால் இதன் பயனாக கன்ஸெர்வேட்டிவ் கூட்டத்திலேயே இரண்டு கக்ஷிகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதன் பயனை அடுத்த பொதுத் தேர்தலில் காணலாம். —ராய்ஸ் விக்லி லண்டன் நிருபர்.

"கைக்குள்ளே என்ன இருக்கு?"

இந்தியர்கள் எப்போதும் பாப்பாக்களென்று பிரிட்டிஷ் எஜமான்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். சாதாரணமாக வீடுகளில் குழந்தைகளைப் பார்த்து, "என் உள்ளங் கையிலே ஒரு நல்ல சாமான் மூடி வைத்திருக்கேன்" என்று பெரியவர் சொல்வார். அந்தக் கையில் உள்ள 'அபூர்வ' சாமானை எடுத்துக்கொள்ள வேண்டுமெனக் குழந்தைகள் ஆசைப்படும்; மூடிய கைகளை திறப்பதற்கு பிரயத்தனிக்கும். வெகு நேரம் கழித்துப் பெரியவர் கையைத் திறப்பார். ஆஹா! கையில் ஒன்று மில்லையெனக் குழந்தைகள் அறிந்து கொள்ளும். பெரியவர்கள் குழந்தைகளை ஏமாற்றிய காக்ஷி முடிவு பெறும்.

பால்டுவின்-சர்ச்சில்-லாயிட் வாக்கு வாதத்தைப் பார்க்கும்போது வீடுகளில் குழந்தைகளை ஏமாற்றும் காக்ஷியே போல் அதுவு மிருக்கிறது. "வெள்ளைக் கடுதாசியில் இந்தியர்களுக்கென்று அபூர்வமான சாமான்கள் இருக்கின்றன" என்று பால்டுவின் புகழ்கின்றார். ஆங்கில ராஜதந்திரிகள் நினைப்பது போல இந்தியர்கள் பாப்பாக்களாக இல்லை. வெள்ளைக் கடுதாசியின் யோக்யதை என்ன வென்பது பலருக்கு நன்றாய்த் தெரியும். ஆகவே சீமையில் ஒரு நாடகம் ஆரம்பிக்கின்றது. சர்ச்சில் கம்பெனி மூடியுள்ள கையைப் பிடிப்பதற்காக ஓடுகின்றது. தங்களைப் பார்த்து இந்தியப் பாப்பாக்கள் தொடர்ந்து ஓடி வருமென்பது அவர்களெண்ணம்.

இதைத் தான் 'மார்னிங் போஸ்டு' என்ற பத்திரிகையும் எழுதி யிருக்கிறது. "கன்ஸெர்வேடிவ் கக்ஷி என்பது பெரியதொரு மரம். அந்த மரத்தில் பட்டுப் போன கிளைகள் விழுந்து போனாலென்ன? அதனால் மரத்துக்கு க்ஷேமம் தான். ஒன்றிரண்டு சிறு கிளைகள் விழுந்து விடுவதால் மரத்துக்கு பிரமாத நஷ்டமில்லை. சத்தமும் பிரமாதமாக இராது" என்று அப்பத்திரிகை எழுதிற்று.

ஒன்றிரண்டு கிளைகள் எதற்காக விழுகின்றன என்ற சூழ்ச்சி இப்போது தெரிகிறது. சில சில இந்தியக் குழந்தைகளை ஏமாற்றி, போட்டிக்குத் தங்களோடு ஓடும்படி செய்யவே இந்தச் சூழ்ச்சி! கடைசியில் வெள்ளைக் கடுதாசியின் உள்ளே வெறும் லொட லொட்டையாக இருப்பதை அனைவரும் அறிந்து கொள்வர்.

—அமிர்த பஜார் பத்திரிகை.

'பக்கெட்' நிறைய கண்ணீர்

அடடா! இந்தியாமீது அந்த மகானுன ஸர் மைக்கேல் ஒட்வியருக்கு எவ்வளவு அன்பு! பஞ்சாபில் புகழ் பெற்ற அம் மகானுக்கு இந்த தேசத்து மக்களிடத்தில் எவ்வளவு கரிசனம்! ஆகவே அந்தப் பிரபு 'பக்கெட் பக்கெட்டாக' கண்ணீர் பெருக்குவதைக் கண்டு யார் தான் ஆச்சரியப்பட மாட்டார்கள்?

இனி இந்தியாவில் நுழையவிருக்கும் அரசியலின் சட்ட சபைகளில், நியமனம் பெற்ற சர்க்கார் அங்கத்தினர்கள் இருக்க மாட்டார்களாம். இந்தக் கூட்டம் மறைந்து போவதை எண்ணி எண்ணி, மைக்கேல் ஒட்வியர் விம்மி விம்மி அழுகின்ருர். 'டைம்ஸ்' பத்திரிகைக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், "இந்தியாவை இத்தனை காலம் ஆள்வதற்கு உதவியாயிருந்த ஸிவிலியன்களை மறப்பதா? புதிய துரைத்தனத்தில் அவர்களுக்கு இடமில்லாவிடில் அது இந்தியாவுக்கு பலத்த நஷ்டமாச்சுதே! என் செய்வது? இப்படிக் கஷ்ட காலம் வரலாமா?" என்று அழுதிருக்கிருர்.

ஸர் மைக்கேல், ஒட்வியர் பாய்ச்சும் இந்த ஒப்பாரிக் கண்ணீர், கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டியில் பாயாதென்று சொல்ல முடியுமா? ஆகவே நாம் மைக்கேல் ஒட்வியருக்கு ஒரு தேறுதல் சொல்ல விரும்புகின்றேம். பாவம்! வயதாச்சு. அவர் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டியது அத்தியாவசியம். ஏதோ மட்டரகமான இந்திய ஜனங்களுக்காகவும், உதவாக்கரையான இந்தியாவுக்காகவும் கரைந்தழுது இந்தப் பெரியார் ஏன் தன் உடல் நலத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும்? எங்கே யூவது போய்ப் படுத்துக்கொண்டு குறட்டை விடட்டுமே! —அ. ப. பத்திரிகை.

லண்டனில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில், ஸர் பாக்ரோ பேசியபோது, "ஸர் மைக்கேல் ஒட்வியர் ஓர் அபசகுனப் பேச்சுக்காரராவார். இந்தியாவினின்று வந்துள்ள நான் சொல்வது இது. பிரிட்டிஷ் ஆட்சியின் காரணமாக தேசியம் இந்தியாவில் பரவி விட்டது. அரசியல் திட்டத்தை ஒழுங்காக நிருமித்துத் தந்தால் என்னுடைய கட்சிக்காரர் அரசியலை நடத்துவதற்குத் தயாரா யிருக்கின்றனர்" என்று கூறினர்.

அனுமார் வாலா?

மனிதர்களுக்கு அதிர்ஷ்டம் அடித்தாலும் இப்படி யல்லவா அடிக்க வேண்டும்? இப்பொழுது மாகாணச் சட்ட சபை நாற்காலிகளை அலங்கரித்துக் கொண்டிருக்கிறுர்களே பெரியார்கள், அவர்கள் கொலுவிருக்கும் காலத்தை இன்னுமொரு தடவை நீடிக்க ஏற்பாடாய்க் கொண்டு வருகிறது. பார்லிமெண்டிலேயே அதற்கு வேண்டிய மசோதாக் கொண்டு வரப்பட்டு விட்டது. லார்டு சபையில் அது இரண்டாம் தடவை படிக்கப்பட்டு நிறைவேறி விட்டது. இவர்கள் மெம்பர் பதவி காலம் அனுமார் வால் போலல்லவா நீண்டு கொண்டிருக்கிறது. ஆஹா! இந்தச் செல்வச் சிரஞ்சீவிகளின் பேறே பேறு! சட்ட சபைப் பதவி சில காலம் நீளுவதென்றுல், அது என்ன லேசான பாக்கியமா? தினம் ஒன்றுக்கு ஆறேழு ரூபாயல்லவா படி? நாள் பூராவும் அல்வாத் துண்டும் லட்டு மாகவே சாப்பிடலாமே! மெத்தை போட்ட ரயில் வண்டி சவாரி யல்லவா? இவற்றையெல்லாம் விட இப்பூலோகத்தில் ஒரு மனிதனுக்கு வேறென்ன சுகம் இருக்கிறது? எலெக்ஷன் செலவுகளில்லாமல் சபை நீண்டு கொண்டே யிருப்பது அங்கத்தினர்களின் அதிருஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தியன் பலி ஆடா?

உலகத்துக்குப் பொருளாதார கதிமோட்சம் ஏற்பட வேண்டுமாம். அதற்காக, பிரிட்டிஷ் பிரதம மந்திரி மாக்டனுல்டும், அமெரிக்கா குடியரசுத் தலைவர் ஹூவெரும் பேசிக் கொண்டார்களாம். இந்தச் சம்பாஷணை நல்ல பலன்களைத் தந்திருக்கிறதென்று ஸர் ஜான் சைமன் பார்லிமெண்டில் தெரிவித்திருக்கிருர். அதோடு சில இரகசியங்களையும் அவர் சொல்லியிருக்கிருர். வெள்ளி மதிப்பு உயரும்படி செய்யப் போகிருர்களாம். இதனுல், இந்தியாவில் சாமான்களின் விலைகள் உயருமாம். அதன் பலனுக, உலகத்து சாமான்களை யெல்லாம் வாங்கும் தென்பு இந்தியருக்கும், சீனருக்கும் அதிகரிக்குமாம். அதனுல், உலக வியாபாரத்துக்கே க்ஷேமம் ஏற்படுமாம். அடடா! என்ன பரோபகாரச் சிந்தை! இந்தியாவையும், சீனுவையும் உலகத்துக்கு நல்ல சந்தையாகச் செய்வதில் எவ்வளவு அக்கறை!

அறைக்குள் ஆட்டம்

கூட்டுக் கமிட்டிக்குக் கூச்சம் ரொம்ப முற்றிவிட்டது. அது திரை போட்டுக்கொண்டு தான் காரியம் செய்ய வேண்டுமோம். பத்திரிகைப் பிரதிநிதிகளோ, பொது ஜனங்களோ உள்ளே வரவிடப்படார்களாம். ஆனால், அதன் முன் கொடுக்கப்படும் சாட்சியங்கள் மாத்திரம் அறிக்கைகளாக வெளியிடப்படுமோம். அப்படி என்ன ஐயா ரகசியம்?

ஸர் ஹோர், காமன்ஸ் சபையில் இதற்குச் சில நொண்டிச் சமாதானங்கள் சொல்லுகிறார். ஆனால், ஆரம்பிக்கும்பொழுதே "அப்பன் குதிருக்குள் இல்லை" யென்பதுபோல, உண்மையைக் கக்கிவிட்டார். "ஜனங்களுக்குத் தெரியாமல் இரகசியம் செய்யவேண்டும் என்பதற்காகச் செய்யும் சூழ்ச்சியல்ல இது" என்கிறார். இல்லையானால், இதற்கு வேறு என்ன சமாதானம்?

60 பேர் மெம்பர் இருக்கிறார்களாம். பிரிட்டிஷ் நிருபர், இந்திய நிருபர் ஆகியவருக்கெல்லாம் ஒரே அறைக்குள் இடங் கொடுத்தால், கூட்டம் ரொம்பப் பெரிதாய்ப் போய்விடுமோம். பெரிய ஒலி பரப்பிகள் வைக்கவேண்டுமோம். இதனால், விவாதங்களுக்கு நிரம்பத் தடையேற்பட்டு விடுமோம். இவ்வாறு சொல்லிவிட்டார் சாமுவேல் ஹோர். இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட சமாதானத்தைத் தெருவில் திரிகிற கிரைக்காரி கூட நம்பமாட்டாள்.

60 பேர் கூடிய ஒரு சபையில் சில பத்திரிகைப் பிரதிநிதிகளுக்குக் கூட இடங்கொடுக்க சாத்தியப் படாதென்று கூறுவது சுத்த நொண்டிச் சாக்கே யல்லவா? பெரிய பெரிய மகாநாடுகளி லெல்லாம் பத்திரிகை நிருபர்களுக்குச் சௌகரியமாக இடம் அளித்து விடுகிறார்கள். 700 பேர் வரை கூடுகின்ற காமன்ஸ் சபையில் நிருபர்கள் இல்லையா? லட்சம் லட்சமாய்ச் செலவழித்து நடத்தப்படும் கூட்டுக் கமிட்டியில் சில ஒலி பரப்பும் கருவிகளை வைப்பது சிரமம் என்றால் அதை யாராவது நம்புவார்களா?

உண்மை என்னவென்றால், கமிட்டியை அம்பலத்தில் ஆட விட்டால் குட்டு வெளிப்பட்டுப் போகும் என்பது சர்க்கார் பயம் என்றுதான் தோன்றுகிறது. அதற்காகத் தான் அறைக்குள் இரகஸ்யமாக ஆடுவதற்கான இந்த ஏற்பாடுகள்.

'சங்கு சகாய நிதி'

முன் வரவு	85	0	0
எஸ். வெங்கட்டரமண ஸ்வாமி, கரூர்	10	0	0
உ. மெ. ரா. சொ. அழகப்ப செட்டியார், கோனாப்பேட்டை	5	0	0
கிருஷ்ணமூர்த்தி, இலுப்பை	5	0	0
டி. சூர்ய நரசிம்மம், தூணி	2	0	0
ரத்தினம் நாயுடு, கரூர்	1	0	0

செய்தித் திரட்டு

பிரார்த்தனை

கூடலூர், மதுரை, சிதம்பரம், சீர்காழி, ஆரணி, காஞ்சிபுரம், வேலூர், தூத்துக்குடி, சேலம், பரங்கிப்பேட்டை, தஞ்சை, நாகை, வீரவநல்லூர், சேயூர் முதலிய விடங்களில் காந்தியடிகளின் க்ஷேமத்தைக் கோரி பிரார்த்தனைகள் நடந்தனவாம்.

பள்ளிக்கூடம்

ஷெயிக்புரா ஹரிஜன ஊழியச் சங்கத்தால் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் இதற்கு வேண்டிய இடமும் கொடுத்து, புத்தகங்களும், இதர சாமான்களும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறாம்.

கிராமத்துக்கு அபராதம்

பெஷாவரைச் சேர்ந்த மார்தான் என்னும் கிராமத்தில் சில செஞ்சட்டையினர்கள் செய்து வரும் காரியத்துக்காக ஷை கிராமத்துக்கு 200 ரூ. அபராதம் விதிக்கப் பட்டிருக்கிறது.

பெஷாவரில் ஒரு காங்கிரஸ் ஊழியருக்கு இரண்டு வருஷக் கடுங்காவலும், 1000 ரூ. அபராதமும்.

வியன்னாவிலிருந்து சுபாஷ்சந்திரபோஸும் வித்தல்பாய் படேலும் ஒரு அறிக்கை விடுத்திருக்கின்றனர். காந்திஜியின் ராஜீய வழி தோற்று விட்டதாகவும், ஆகவே காங்கிரஸ் மகா சபையைச் சீர்திருத்தி அமைக்க வேண்டுமென்றும் அவ்வறிக்கையில் சொல்லி யிருக்கின்றனர்.

பம்பாயில் தொழிலாளர் தலைவரான பாபு ராவ் பரேக் என்பவர் ஊரைக் கொள்ளையடிக்கச் சொன்னாரென்று குற்றம் சாட்டப்பட்டு ஒரு வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டார்.

Edited and Published by S. Subramanian
and Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.